Registered No M. 5068.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0]    ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள்.    [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ ஐப்பசி௴ 9௳ 25—10—1948 ஹிஜ்ரி 1367 ஜில்ஹிஜ்ஜா௴ 21௳ திங்கட்கிழமை. } இதழ் 38

## ஈத் தின வைபவத்தில் ராஜாஜி.

### இந்திய சர்க்கார் எல்லோரையும் ஒரே கண்ணால் நோக்கும்.

○ ○ ○

எல்லா சமூகத்தினரின் விசேஷ தினங்களிலும் பங்கெடுத்துவந்த முஸ்லிம் அரசர்களுக்குப் பிறகு இந்தியாவின் இருநூறு வருஷ சரித்திரத்தில் கவர்னர் ஜெனரல் ஸ்ரீ C ராஜகோபாலாச்சாரியார் முதன் முதலாக ஈத்தின வைபவத்தில் கலந்துகொண்டார்.

சரியாக காலை 9-10.க்கு ராஜாஜி வந்தார். ஜமீயத்துல் உலமா பொதுக்காரியதரிசி மௌலானா ஹிப்ஸுர் ரஹ்மானும் காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் வரவேற்றார்கள். டில்லி மாகாண கமிஷனர், டெபுடி கமிஷனர், ஸிடி மாஜிஸ்டிரேட், லாலா மெஹர்சந்த் கன்னாவும், ஜெனரல் ஷாநவாஸ், மா. கா. க. தலைவர் ராதாரமண் முதலிய உத்தியோக சார்பற்ற பிரமுகர்களும் கூட இருந்தனர் ஈத்காஹ் கிழக்கு வாயிலுக்கு சமீபம் மாகாண ஜமீயத் அமைத்திருந்த அலங்காரமான மேடைக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள் ஜமீயத் தொண்டர்களின் மெச்சத் தகுந்த முயற்சியால் எவ்வித ஆரவாரமுமில்லாமல் வரவேற்பு வைபவம் அமைதியாகவே நடந்தது.

சரியாக 9-15-க்கு கொழுகை ஆரம்பித்தது. ஜமீயத்துல் உலமா உபதலைவர் மௌலானா அஹ்மத் ஸயீத் தொழுகையை நடத்தினார். இந்திய சர்க்கார் கல்வி மந்திரி இமாமுல் ஹிந்த் மௌலானா அபுல்கலாம் ஆஸாத், ஜெனரல் ஷாநவாஸ் இருவரும் தொழுகையில் கலந்துகொண்டார்கள்.

ஏழை-பணக்காரன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், என்ற வித்தியாசமின்றி தோளோடு தோள் நின்று ஆண்டவன் சன்னிதானத்தில் எல்லோரும் சமம் என்பதற்கு எடுத்துக்காட்டாக வணங்குவதை மேடையிலிருந்து கவர்னர் ஜெனரலும் இதர ஹிந்து சீக்கிய பிரமுகர்களும் பார்த்துக்கொண்டிருந்தனர். அல்லாஹு அக்பர் என்ற கோஷத்துடன் ஈத்காஹ் முழுதும் நிசப்தம் நிலவிற்று. அனைவரும் இறைவனுடைய தியானத்தில் மூழ்கினர்.

தொழுகைக்குப் பின் மௌலானா அஹ்மத் ஸயீத் ஈத்தின குப்தா (பிரசங்கம்) நிகழ்த்தினார். பிறகு எல்லோரும் கவர்னர் ஜெனரலின் பொன்மொழிகளைக் கேட்க கிழக்கு வாயிலுக்கு முன்புறம் கூடினார்கள். கட்டுப்பாட்டைக் காப்பதில் ஜமீயத் தொண்டர்களுக்கு அஹ்ரார் வாலண்டியர்கள் உதவினர். மௌலானா அபுல்கலாம் ஆஸாத், மௌலானா அஹ்மத் ஸயீத், மௌலானா ஹிப்ஸுர் ரஹ்மான் மூவரும் மேடைக்கு வந்தனர். முஸல்மான்களின் சார்பில் மாலைகள் அணிவித்து மௌலானா அஹ்மத் ஸயீத் கவர்னர் ஜெனரலை வரவேற்றுப் பேசினார்.

### மௌலானா அஹ்மத் ஸயீத் வரவேற்புரை,

டில்லி வாசிகள் எப்பொழுதுமே வரவேற்று வந்திருக்கும் ஒரு சப்பிரதாயத்தை இன்று உங்கள் நாட்டின் கவர்னர் ஜெனரல் திரும்பவும் ஆரம்பித்து வைக்கிறார். டில்லியிலுள்ள ஹிந்து முஸ்லிம்கள் பரஸ்பரம் நெருங்கிப் பழகி வந்திருப்பதை டில்லி முஸ்லிம்கள் நன்றாக அறிவர். விசேஷ தின வைபவங்கள், விழாக்கள், ஊர்வலங்கள், வணக்க ஸ்தலங்கள், இன்ப துன்பங்களில் இங்குள்ள ஹிந்து முஸ்லிம்கள் பரஸ்பரம் பங்கெடுத்து வந்திருக்கின்றனர்.

முஸ்லிம்களின் சவ அடக்கத்தில் ஹிந்துக்கள் கலந்துகொள்வதும் ஹிந்துக்களின் சவ ஊர்வலங்களுக்கு முஸ்லிம்கள் தோள் கொடுப்பதும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. இங்கு கூடியிருக்கும் முஸல்மான்களும் அதற்கு சாட்சியமளிப்பர் எத்தனையோ முறை ஹிந்துக்களின் சவ ஊர்வலத்தை சுமந்து சென்றதற்கு என்னுடைய தோள்பட்டைகளே சாட்சி.

பிரிட்டிஷ் துப்பாக்கிகளுக்கு டில்லியிலுள்ள ஹிந்து முஸ்லிம்கள் ஒருங்கே இலக்கான கிலாபத் போராட்டத்தில் மட்டும் ஹிந்துக்கள் முஸ்லிம்களின் ஜனாஸாக்களையும் முஸ்லிம்கள் ஹிந்துக்களின் சவ ஊர்வலங்களையும், சுமந்து சென்றார்களென்று சிலர் சொல்லக்கூடும். ஜனங்கள் அதிகமாய் இறந்த காலத்தில் இவ்வித சம்பவங்கள் அதிகமாய் நடந்தன வென்றால் சாதாரண காலத்திலும்கூட இதற்கு அநேக உதாரணங்கள் கிடைக்கத்தான் செய்கின்றன. டில்லியிலுள்ள ஹிந்து மூஸ்லிம்கள் இவ்வாறு பாலும் சர்க்கரையும் போல் இருந்து வந்திருக்கின்றனர்.

1857-ல் முஸ்லிம்கள் டில்லியில் அழிக்கப்பட்டு வெளியேற்றப்பட்ட பிறகு சில தினங்களுக்காக இது தடைபட்டிருந்தது. நாளாவட்டத்தில் முஸல்மான்கள் தங்கள் சிதைந்த கூடுகளின் சறுகுகளைப் பொறுக்கியெடுத்து திரும்பவும் டில்லியில் கூடுகளை அமைத்தனர். அதிலிருந்து இன்ப துன்பங்கள், விழாக்கள், விசேஷ தினங்களில் பரஸ்பரம் பங்கெடுத்துக்கொள்ளும் பழைய வழக்கம் திரும்பவும் ஆரம்பமாயிற்று.

ராஜாஜி! 1947-ல் நம்முடைய கூடுகள் திரும்பவும் சிதைந்து விட்டன. இத்தடவை ஏற்பட்ட சிதைவினால் சிதைந்த சருகுகளைப் பொறுக்கி திரும்பவும் கூடுகளை அமைப்பது சிரமசாத்தியமாகியிருக்கிறது. தாங்கள் இன்று அந்த முயற்சியை ஆரம்பிக்கின்றீர்கள். உலகத்தை விட்டுச் சென்றபோது மஹாத்மா காந்திஜீ தன் உள்ளத்தில் கொண்டுசென்ற ஆசையில் ஆண்டவன் தங்களுக்கு வெற்றி அளிப்பாராக! பாபூஜியின் உண்மையான வாரிசு நீங்கள்தான் உங்களுடைய முயற்சியால் டில்லியிலுள்ள ஹிந்து முஸ்லிம்கள் பாலும் சர்க்கரையும் போல் ஒன்று சேர்ந்து இன்ப துன்பங்கள், விழாக்கள் விசேஷ தினங்களில் முன்போலவே பரஸ்பரம் கலந்துகொள்வதன் மூலம் பாபூஜியின் ஆசை பூர்த்தியாகுமென்று நாங்கள் நம்புகிறோம். முஸல்மான்கள் சார்பில் மனப்பூர்வமான நன்றி அறிவிப்பதுடன் தங்கள் லட்சியத்தில் வெற்றியடைவீர்களென்று நம்புகிறேன்.

ஸிடிமாஜிஸ்டிரேட் குமார மஹேந்திர சிங் ஈத் தின வாழ்த்து வாசித்தார். பிறகு ஜனங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஈத்தின செய்தியை கவர்னர் ஜெனரல் படித்தார்.

## கவர்னர் ஜெனரலின் 'ஈத்'தின செய்தி.

இன்றைய நாள் தொழுகை, குர்பானி (பலி)யின் நாளாகும் பண்டைய காலத்திலிருந்தே உலகத்திலுள்ள எல்லா ஜாதியினரும் பலியிடுவதன் மூலம் ஆண்டவனை பூஜித்துவருகின்றனர். சாப்பிடுவதற்கு முன் உணவை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து தூய்மையாக்கி சாப்பிடவேண்டுமென்று ஹிந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன. இல்லையேல் அது திருட்டாகவே கருதப்படும். டில்லி வாசிகள் தஸராவையும் ஈத்தினத்தையும் சேர்ந்து கொண்டாடியிருக்கிறார்கள். சகோதரத்துவ சந்துஷ்டியில் எவ்வித குறையும் ஏற்படவில்லை. இது திருப்தியளிக்கும் பெரிய விஷயமாகும். நாம் கஷ்டங்களைத் தாண்டிவிட்டோமென்று நான் இதற்கு முன்பும் சொல்லியிருக்கிறேன். இனி நாம் கடந்த கால மன வேதனைகளை மறந்துவிட வேண்டும். அதனால் நமக்கு நன்மை உண்டாகும்.

எல்லோரையும் ஒரே கண்ணோட்டத்துடன் நோக்க இந்திய சர்க்கார் உறுதி கொண்டிருக்கிறது. கடவுள் ஒருவராக இருக்கையில் - சத்தியம் ஒன்றாக இருக்கும்போது, மனிதர்கள் தனித்தனி பாஷைகள் பேசுவதிலோ, அல்லது தனித்தனியாக பூஜை, தொழுகை நடத்துவதிலோ என்ன இருக்கிறது. நாம் ஞானத்தை வளர்க்க வேண்டும். வெளி வித்தியாசங்களில் இறங்கக்கூடாது. உட்கருத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதுதான் உண்மையான ஞானம். அதன் மூலமே நம் நாட்டில் சமாதானமும் சந்தோஷமும் வளரமுடியும்.


"ஆஸாத்"

(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.)

உங்கள் ஊர் ஏஜெண்டிடம் கேளுங்கள், உங்கள் ஊரில் "ஆஸாத்" ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுக்கும்படி அவருக்கு யோசனை கூறுங்கள். இது உங்கள் தேசீயக் கடமை. "ஆஸாத்" சந்தாதாரர்களாக ரூ. 6/- (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர், ஆஸாத், குடந்தை.

# ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கம் மீது தடை

## சங்க குருஜி விடுதலைக் குறித்து 'வந்தே மாதரம்'

ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கத்தின் குருஜீயான கோல்வால்கரை மத்தியமாகாண சர்க்கார் விடுதலை செய்ததைக் குறித்து 'வந்தே மாதரம்' எழுதியிருக்கும் தலையங்கம்.

"ராஷ்டிரீய சுயம் சேவக் சங்க குருஜீயின் விடுதலை குறித்து சக பத்திரிகைகள் எழுதியுள்ள தலையங்கங்களில் ராஷ்டிரீய சேவக் சங்கம் மீது தடை விதித்தது தவறென்றும் அதை நீக்கவேண்டியது அவசியமென்றும் நிரூபிக்க முற்பட்டிருப்பதைப் பார்த்து நமக்கு ஏற்பட்ட திகைப்புக்கு எல்லையிருக்கவில்லை நம்முடைய காயங்களில் உப்புப்பொடி தெளிக்கப்படுவதாகவே உணருகிறோம். ஜனங்கள் வகுப்புவாத தீயால் பொசுங்கிக்கொண்டிருந்த அச் சமயத்தில், காங்கிரஸ் பெயரைச்சொல்லுவதும் பாவமாக இருந்த அக்காலத்தில் ராஷ்டிரீய சேவக்சங்கத்தின்மீது தடை விதிக்கவேண்டுமென்று 'வந்தே மாதரம்' வற்புறுத்தியது அனைவருக்கும் தெரியும். அன்று காலப் போக்கை எதிர்த்து நிற்கமுடியாமல் நிலைமைக்கு ஏற்றவாறு பெரிய பெரிய தேசீய வாதிகளும் சாய்ந்து கொண்டிருந்தனர். காங்கிரஸ் தலைவர்கள் அப்பொழுது பேசியதும் எழுதியதும் பார்த்தால் காங்கிரஸின் பழைய சரித்திரம் காலடியில் மிதிக்கப்படுவதாகவே தோன்றிற்று அந்த பயங்கர காலத்தின் நினைவால் இன்றைக்கும் உடல் சிலிர்க்கின்றது. அப்பேற்பட்ட நிலைமையில் 'வந்தே மாதரம்' டில்லியிலிருந்து வெளிவர ஆரம்பித்தது. 'வந்தே மாதரம்' வெளிவந்த ஐந்து தினங்களுக்குப் பிறகு டில்லி ராம்லீலா மைதானத்தில் ராஷ்டிரீய சேவக் சங்கத்தின் பயங்கர அணிவகுப்பு ஒன்று நடந்தது. அதைப்பார்த்து நாம் திகைத்தோம். நம் ஆசையும் காங்கிரசின் மஹத்தான சரித்திரமும் அழிவதாகத் தோன்றியது. "இந்தியாவில் 'பக்வா' கொடிபறக்கும், அந்தக்கொடியை வேறுவிதமாக பார்ப்பவர்களின் கண்கள் தோண்டி எடுக்கப்படும்" என்று சங்க குருஜீ பேசியதை நம் காதுகள் கேட்டபோது, இந்தியாவின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவேதென்பட்டது. காங்கிரஸ்தலைவர்களையும் அரசாங்கத்தையும் குறித்து குருஜீ பேசிய கேவலமான வார்த்தைகளைக் கேட்டு நாம் திகைத்தோம். "அரசாங்கம் ராஷ்டிரீய சங்கத்தின்மீது தடைவிதிக்க விரும்புகின்றது, நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தாலும் காரவான் போய்க்கொண்டுதானிருக்கும். ராஷ்டிரீய சங்கத்துடன் எந்த சக்தி மோதினாலும் அது சுக்கு சுக்காக தகர்க்கப்படும்." என்று குருஜீ பேசினார். அந்தக்கூட்டத்தைப் பார்த்த பிறகு நம்மால் பேசாமல் இருக்க முடியவில்லை. மறுதினமே அந்த பயங்கர ஆர்ப்பாட்டத்தைக் குறித்து நாம் தலையங்கத்தில் குறிப்பு எழுதினோம். ராஷ்டிரீய சங்கம்மீது தடை விதிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டிருந்தோம் நம்முடைய குரல் கேட்கப்படவில்லை. எவ்வித தடையுமின்றி சேவக் சங்கம் வகுப்புவாத விஷத்தை கக்கிக்கொண்டிருந்தது. வழக்கு விசாரணையிலிருந்துவரும்போது தேசப்பிதாவின் கொலையில் சங்கத்து பங்குண்டா? இல்லையா? என்பதைக் குறித்து நாம் எவ்வித அபிப்பிராயத்தையும் வெளியிட விரும்பவில்லை. ஆயினும் வாலிபர்களுக்கு உடற்பயிற்சி அளிப்பதாக சாக்குப் போக்கு சொல்லிக்கொண்டு, அந்தரங்க கூட்டங்களில் ஒன்று திரட்டி, அவர்களுக்குள் வெறுப்பு வேற்றுமையைப் புகுத்தி, ஹிந்து ராஜ்யத்தின் ஆதரவாளர்கள் உண்டாக்கிய விஷமயமான சூழ்நிலையின் உற்பத்தியே காந்திஜீயின் கொலைக்காரர்கள் என்று சொல்ல நாம் தயங்கமாட்டோம்.

---

### லோயர் அணைக்கட்.

ஜெயப்பிரகாஷ் சங்கத்தின் சார்பில் அக். 5-உ காந்திஜி பிறந்த தின விழா ஷியூர் ஜெய்ஹிந்த் பார்க்கில் விமரிசையாய் கொண்டாடப்பட்டது.

அவ்வமயம் குடவாசல் தோழர் K. S ராமசாமி அவர்கள் தலைவராயும் புவனகிரி தோழர் சீனிவாச மூர்த்தி அவர்கள் மூவர்ண கொடியையும் சோஷலிஸ்டு கொடியையும் ஏற்றுவித்தார். தலைவராலும், சீனிவாச மூர்த்தி அவர்களாலும் சோஷலிஸம் என்பதுபற்றி சுமார் 3-30 மணி நேரம் விரிவாய் பேசப்பட்டதுடன் அணைக்கரை தோழர் A அப்துல்மஜீது அவர்களாலும் ஷியூர் ராமாமிர்த தொண்டமான் அவர்களாலும் காந்திஜீயையும் அவர்கள் தத்துவம்பற்றியும் விரிவாய் பேசப்பட்டது. பின்னர் ஷியூர் K. ராமையன் அவர்களால் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

ஜெயப்பிரகாஷ்
வாலிபர் சங்கம்,
அணைக்கரை.
7—10—48.

இங்ஙனம்,
**க. ஜெயராமன்,**
காரியதரிசி.

# சர்க்கார் சிந்தனைக்கு

நேற்றும் இன்றும் இவ்வூரிலும் சுற்று கிராமங்களிலும் வயது வந்தோர் ஒட்பதிவு நடைபெறுகின்றது. கூடுமானவரை பதிவு செய்யும் உத்தியோகஸ்தர்கள் மிகவும் நல்ல முறையில் தான் நடந்துகொள்கின்றனர். ஆனால் முஸ்லிம்கள் வாழும் பிராந்தியங்களில் முஸ்லிம் அல்லாத உத்தியோகஸ்தர்களை நியமித்து பெருந் தவறு செய்திருக்கின்றனர் முஸ்லிம்களின் பெயர்களை சரியாகவோ ஒழுங்கான பதங்களாகவோ அவர்களால் எழுத முடிவதில்லை. ஆங்காங்கே யுள்ள வாலிபர்கள் சிலர் உதவி செய்தும்கூட பல எழுத்துப்பிழைகள் இருக்கத்தான் செய்கின்றன. சென்ற பலதேர்தல்களில் இம்மாதிரியான சிறியதவறுகள் பல ஒட்டர்களை தங்களின் வாக்குரிமைகளை இழக்கும்படி செய்திருக்கின்றன. குறிப்பாக "அப்துல் ரஹ்மான்" என்ற பெயருக்கு இந்து பதிவு உத்யோகஸ்தர்கள் "அப்து ராமன் என்று எழுதியிருக்கின்றனர். இப்படி பல இருக்கின்றன இதைதேர்தல் காலங்களில் போலிங் ஆபீஸர்கள் ஒத்துக்கொண்டாலும் எதிர்க் கட்சி போலிங் ஏஜண்ட்கள் ஒத்துக்கொள்வது கிடையாது. ஆகையால் இந்த சிறிய தவறுகளை சர்க்கார் கட்டாயம் கவனித்துத்தான் ஆக வேண்டும்.

இப்பொழுதுகூட ஒட்டர்களாக பதிவுசெய்திருக்கும் வாக்காளர்களின் பெயர்களை பிராந்திய வாரியாக சம்மந்தப்பட்ட இன உத்தியோகஸ்தர்களை வைத்து சரிபார்த்து ஒழுங்குசெய்ய முற்படவேண்டும். அல்லது பெயர்கள் அச்சடிக்கும் அச்சகங்களில், சரி பார்த்து எழுத்துப்பிழைகளை திருத்தி ஒழுங்குபடுத்துபவர்கள் அந்தந்த இனங்களை சேர்ந்தவர்களாகவே இருக்கும்படி சர்க்கார் செய்யவேண்டும். முஸ்லிம்களின் பெயர்களில் இன்னின்ன தவறுகள் இருக்கின்றன அது இப்படித்தான் இருக்கமுடியும், என்ற அளவில் தெரியக்கூடியவர்கள் முஸ்லிம்களாகத்தான் இருக்கமுடியும் ஆகையால் சர்க்கார் ஒட்டர் ஜாபிதாக்கள் அச்சடிக்கும் சந்தர்ப்பத்திலாவது புரூப் திருத்துவதற்கு சம்மந்தப்பட்ட இன ஆபீசர்களை நியமித்து நல்ல முறையில் கவனித்தால் ஓரளவுக்காவது வாக்காளர் ஜாபிதா சிறந்து விளங்க முடியும் என்று தெரிவித்துக்கொள்வதோடு சர்க்கார் இது விஷயத்தில் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
T. M. பீர் முஹம்மது, கல்லிடைகுரிச்சி.
9—10—48.

## அதிராம்பட்டணம்.

அதிராம்பட்டணம் நகர காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக 8—10—48-ல் மாலை 6-மணிக்கு பழஞ்செட்டித்தெருவில் காந்தி ஜெயந்தி விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. பட்டுக்கோட்டை ஸ்ரீ V. நாடிமுத்து பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார்கள். அவ்வமயம் கும்பகோணம் "ஆஸாத்" ஆசிரியர், ஜனாப் அப்துல் அஜீம், மன் ர்குடி ஸ்ரீ காக்காஜி: பட்டுக்கோட்டை ஸ்ரீ R. M. கோவிந்தசாமி செட்டியார் முதலியோர் காந்திஜீயின் வாழ்க்கையைப் பற்றியும், அன்னாரின் லக்ஷியங்களை பின்பற்றி மக்கள் நடந்துகொள்ள வேண்டிய அவசியத்தைப்பற்றியும், வெகு விரிவாக சொற்பொழிவாற்றினார்கள். இரவு 9-30-மணிக்கு கா. கமிட்டி தலைவர் S. S. இபுராகீம் வந்தனோபசாரம் கூறியபின் கூட்டம் இனிது முடிவு பெற்றது

R. வரதராஜலு, காரியதரிசி,
நகர காங்கிரஸ் கமிட்டி, அதிராம்பட்டணம்.

● ● ●

## முள்ளங்குடி.

காந்தி பிறந்த தின விழா கொண்டாட்டம் 6-10-48 புதன்கிழமை மாலை 6-மணிக்கு தா. கா. க. தலைவர் திரு. அப்துல் மஜீது அவர்களால் தேசீயக் கொடி ஏற்றுவித்தும் கமிட்டி காரியாலயத்தின் முன்பு ஷியார் தலைமையில் ஓர்பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் திரு. அப்துல் மஜீது அவர்களாலும் கி கா. க. தலைவர் திரு S. S. குழந்தைவேல் செட்டியார் அவர்களாலும், காந்திஜீயின் வாழ்க்கை அவருடைய உயரிய கொள்கைகளைப்பற்றியும் நாம் அவைகளை அனுஷ்டிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் தெளிவாக விரிவுரையாற்றினார்கள். பின் அலங்கரிக்கப்பட்ட மகாத்மாஜீயின் திரு உருவப்படத்திற்கு ஆராதனை நடத்தப்பெற்றும் கூடியிருந்த மக்களுக்கு தின்பண்டங்கள் வழங்கப்பெற்றும் கமிட்டி காரியதரிசி திரு M. S. வைத்திநாதன் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 9-மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

M. S. வைத்தியநாதன் காரியதரிசி,
முள்ளங்குடி கிராம காங்கிரஸ் கமிட்டி மதகுசாலை,

உங்கள் வியாபாரம் விருத்தியடைய
ஆஸாதில்
விளம்பரம் செய்யுங்கள்.

# சமூக வாழ்வு.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும், ஒருவர் மற்றவருடைய வாழ்வையும், பழக்கங்களையும் பரஸ்பரம் மாற்றியிருப்பது கொஞ்ச நஞ்சமல்ல. மனிதவாழ்வில் நேரும் மிகமுக்கியமானதும் குறிப்பிடத் தக்கதுமான மூன்று சம்பவங்கள் பிறப்பு, திருமணம், இறப்பு என்பவையாம். அவற்றையொட்டிய சடங்குகள். விசேஷங்கள் எப்படி நடைபெறுகின்றன என்று காண்பதன்மூலம் இதை விளக்கலாம் பீஹாரில் மத்தியதர வகுப்பினரான ஹிந்து முஸ்லிம்களுடைய சிலசாதாரணச்ச டங்குகளையும், வழக்கங்களையும் இங்கு குறிப்பிடுகிறேன் :—

ஒரு குழந்தை பிறந்தசமயத்தில், அதுவும் முக்கியமாக ஆணாக இருக்குமானால், சோகர் என்று சொல்லப்படும் பாட்டுகளைப் பாடுவது சாதாரண வழக்கம். அடுத்த வீட்டுப் பெண்கள்கூட இப்பாட்டுக்களிலும் இதர கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்வார்கள். பேய் பிசாசு நுழையா வண்ணம் பிரசவ அறையின் கதவருகில் தீ வளர்க்கப்படுகிறது. ஓர் இருர்புத்துண்டு, முத்தியாசிஜ் என்ற ஒருவகை முட்செடி, இன்னும் சில சாமான்கள் அங்குவைக்கப்படுகின்றன ஆறாவது நாளில் தாயும் சேயும் நீராட்டப்படுகின்றனர். இதற்குச் சாத்தி அல்லது ஆறாம் நாள் சடங்கு என்பார்கள். அன்று தாய் குழந்தையைக்கையில் எடுத்துக்கொண்டு வானத்தைப்பார்த்து நட்சத்திரங்களை எண்ணுவாள். இருபதாம்நாள், ஐம்பதாம் நாட்களிலும் பிஸ்தௌரி சீளா எனப்படும் சடங்குகள் வேறு இருக்கின்றன. ஆறாம்நாள் வரையும், தாய் தீட்டானவள் எனறு கருதப்படுகிறாள். பிறத்தியார் சாப்பாட்டை அவள் தொடக்கூடாது. பேய்பிசாசுகள் வருவது, உணவுத்திட்டு, குறிப்பிட்ட நாட்களில் குளிப்பதான காரியங்கள் வைதிக இஸ்லாமைச் சேர்ந்தவையல்ல. இருந்தாலும், அவை சாதாரணமாய் முஸ்லிம் வீடுகளில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

ஹிந்து முஸ்லிம்களிடையே, பிறந்தநாள் முடியெடுப்பதென்பது ஒரு முக்கியமான சடங்கு ஆகும். அதற்கு ஹிந்துக்களிடையே முண்டன் என்றும், முஸல்மான்களிடையே அக்கிகா என்றும் பெயர் உண்டு. இச்சடங்குக்கு ஏதாவது மதசம்பந்தமான முக்கியத்துவ மிருக்கலாம். ஆனால், இவைகளை ஒரே மாதிரி அனுஷ்டிப்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமில், திருமணம் என்பது சட்டரீதியாக ஓர் ஒப்பந்தம் ஆகும். மாப்பிள்ளையும், பெண்ணும், கணவன் மனைவியராகக்கூடி வாழ ஒப்புக் கொள்ளுகிறார்கள். மற்ற ஒப்பந்தங்கள் போல் இதுவும் யோஜனை செய்து தீர்மானிக்கப்பட வேண்டியதே; சாட்சிகளும் அத்தாட்சியிடவேண்டியது. இவ்வொப்பந்தத்திலிருந்து பிரிந்துக் கொள்ளலாம். பிரிவின் போது நஷ்டஈடு செலுத்த வேண்டும். கல்யாணத்தின்போதே அதாவது ஒப்பந்தத்தின்போதே நஷ்டஈட்டுத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டு விடும். கல்யாணரத்து காலத்தில்தான் அது செலுத்தப்படும். திருமணத்தின் முக்கியச்சடங்கு சுருக்கமான காரியமே. மாப்பிள்ளை பெண்வீட்டார்கள், சாட்சிகள் முன்பாகக்கூடிச் சம்மதமளிக்க வேண்டியது. இதற்குச் சில நிமிஷங்களே பிடிக்கும். இதற்கு நிக்காஹ் என்று பெயர். கொண்டாட்டமாக நடத்துகிற பகுதிக்கு ஷாதி எனப்படும். இதைத்தனியாக நடத்தலாம். ஹிந்து மதத்தில், திருமணம் ஒரு தனிச்சடங்கு. மதக்கோட்பாட்டின்படி பிரிவு செய்யமுடியாதது. மணமக்கள் எடுத்துக்கொள்வது மதவிரதம் இத்திருமணத்திற்கு மனிதர்கள் மாத்திரமின்றி சூரியன், சந்திரன், நெருப்பு, பூமி, நீர், கல் இவைகளெல்லாம் சாட்சியாக அமைகின்றன. பிரிந்திருக்கும் மனித ஆன்மா யுகமுடிவில் நித்தியப்பரம் பொருளில் சேர்ந்தொன்றாகும் வரை இவ்வியற்கைகள் நிலைத்திருப்பன எனக்கருதப்படும் திருமணச்சடங்கை முறையாக முழுதும் நடத்துவதற்கு நெடுநேரமாகும். இவ்வாறு இவைகள் அடிப்படையில் வேறுபடுவதாகத் தோன்றும் ஆனால் நடைமுறையில் ஹிந்து முஸ்லிம்கள் முக்கியமான சடங்குகளைத் தங்களது மதானுசாரப்படி நடத்தினாலும், இதர சில்லறைச் சடங்குகளைப் பெரும்பாலும் ஒன்றுபோலவே நடத்துகிறார்கள். ஆடம்பரம், ஊர்வலம், விருந்துகள், கொண்டாட்டங்கள், பெண்கள் பாடும்பாட்டுக்கள், வெகுமதிகள், தமாஷ்கள், விளையாட்டுச் செயல்கள் எல்லாம் ஒன்றுபோல இருக்கின்றன. இஸ்லாம் எல்லா ஆடம்பரத்தையும் தடுக்கிறது. ஹிந்து மதம் அதைவிதிக்கவுமில்லை, விலக்கவுமில்லை. ஆனால் இவ்விரு வகுப்பாரிடை கலியாணக் காரியங்களையும் கவனிப்பவர் ஒரு வித்தியாசமும் கண்டுபிடிக்க முடியாது.

இவைகளின் விரிவான வருணனைகள் சுவையூட்டுவதாகயிருக்கும்.

பீஹாரிலுள்ள முஸல்மான்களிடையே கல்யாணத்தில் நடைபெறும் சடங்குகள் கொண்டாட்டங்கள் எல்லாம், ஹிந்துக்களுக்குப் பொதுவான அனுஷ்டானங்கள், சடங்குகள், கொண்டாட்டங்களால் உருப்பெற்றவை. முன்கூறியபடி முஸ்லிம் திருமணத்

தில், நிக்காஹ்தான் முக்கியப்பகுதி. வைபவப்பகுதி ஷாதி எனப்படும். அநேகமாய் இரண்டும் ஒரேசமயத்தில் நடைபெறுவதுண்டு. சிலசமயங்களில், ஷாதி வேறு சமயத்திலும் வேறு இடத்திலும் நடைபெறும் ஷாதியின்போது மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டுக்குச்செல்வார்கள். வழக்கமாய்ப் பெண்வீட்டில் தங்குவதில்லை. வேறுவாடகை வீட்டில் தங்குவார்கள் அவரவர்களுடைய செல்வத்துக்கும் சமூக அந்தஸ்துக்கும் தக்கபடி அவர்களுடைய சிறப்பு, ஆடம்பரம் பரிவாரம் முதலியன அமைந்திருக்கும். மாப்பிள்ளை வீட்டார் வருவதற்குமுன் மாப்பிள்ளை வீட்டிலும் பெண்வீட்டிலும் சில சடங்குகள் நடைபெறும். இவைகளிலொன்று ரத்ஜாகா எனப்படும். பெண்கள் இரவில் விழித்திருந்து ஒருவகை உணவு சமைப்பார்கள். இன்னொரு நாளில் மண்டாவ என்னும் சடங்கு நடைபெறும். அப்பொழுது நீண்ட மூங்கில் கழிகளால் உள்முற்றத்தில் மணவறை போடப்படும். மூன்றுவதொரு நாள், சாதம் சமைத்து இறந்தவர்கள் பெயரால் ஏழைகளுக்கு உணவளிக்கப்படும். கந்தூரி நடைபெறும். இந்த உணவை சையதுப் பெண்கள் மாத்திரம் உண்ணலாம். குறித்த நாளில் மாப்பிள்ளை வீட்டார் அல்லது பராத் புறப்பட்டுப் பெண்வீட்டுக்கு வருவார்கள். திருமணத்திற்கு முன்பு பெண் மாயுன் அல்லது மஞ்ஜா என்பதைக் கடைப்பிடிக்கவேண்டும் அப்பொழுது அவள் வீட்டைவிட்டு வெளியேறக் கூடாது. யாராவது - தெரிந்தெடுத்த சிலபெண்களே அக்காலத்தில் அவளைக்காணலாம். அவளுக்கு உபதான் (மஞ்சளும் மற்றுஞ்சில சரக்குகளும் சேர்ந்த ஒருவகைத் தயாரிப்பு) தேய்க்கப்படும். திருமணத்தன்று தான் வெளியே வருவாள்.

ஹிந்துக்களுடைய மண்டவம் அல்லது மண்டபத்தை கலியாணத்திற்கு ஒருநாள் அல்லது இண்டு நாள் முந்தி ஒரு நல்ல நாளில் செய்வதுண்டு. அதில் தான் கலியாணம் நடைபெறும். காலஞ்சென்ற மூதாதையரை வரவழைத்து, அவர்கள் மணமக்களைக் கண்டு களித்துத் திருமணத்தை வாழ்த்தி மணமக்களைத் தங்களுடைய உறவினத்தில் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக ஒரு சடங்கு உண்டு. பெண்ணுக்கு மஞ்சள் தேய்க்கப்படும். இது ஒரு முக்கிய சடங்கு. மஞ்சள் ஒரு பெண்ணுக்கு இரண்டு தடவை தேய்க்கப்பட மாட்டாது என்று ஒரு பழமொழி வழங்கப்படுகிறது; அதாவது ஒரு கணவன் இறந்தாலும் அப்பெண்ணுக்கு மறுமணம் கிடையாதென்பதாம். திருமணத்திற்கு முன்பு யாரையும் பார்க்க முடியாதபடி தனியாக வைக்கப்படுகிறாள். அப்பொழுது மஞ்சட் பூச்சினாலும், குளிக்காததினாலும் மெலிந்து அழுக்க [illegible]ங்க கென்படுவாள். கலியாணத்திற்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு முன்பே ஒரு சடங்கோடு நீராடுவாள் ஒவ்வொரு முக்கிய சந்தர்ப்பத்திலும் பிராமணர்களுக்கு உணவிடுதல் இந்தியா முழுதுமுள்ள ஒரு சாதாரண வழக்கம். ஹிந்து முஸ்லிம்களுடைய கலியாண ஊர்வலம் அல்லது பராத், ஆடம்பரத்திலே ஒன்றுபோல இருக்கும்; வித்தியாசம் காண முடியாது யானைகள், குதிரைகள், தற்காலங்களில் மோட்டார்கார்கள், இரவாயிருப்பின் எல்லா வித விளக்குகள், மேளதாளங்கள் எல்லாம் தடபுடலாயிருக்கும். ஹிந்துக்கள் முஸ்லிம்களிடையே மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டில் தங்குவதில்லை. அவ்வளவு பெரிய கூட்டத்திற்குப் பெண் வீட்டில் இடம் இருக்காது

பீஹாரில் ஹிந்துக்கள் வீடுகளில் ஊர்வலம் பெண் வீட்டிற்குச் செல்லும். அங்கு மாப்பிள்ளையைப் பெண் வீட்டார் நீர் தெளித்து, அரிசி தூவி, நெற்றியில் திலகமிட்டு விளக்கு ஆரத்தி எடுத்து வரவேற்பார்கள். பெண்ணின் தகப்பனும் மாப்பிள்ளையைச் சடங்கு பூர்வமாக வரவேற்று சில இனாம்கள் அளிப்பார். இதர விருந்தினர்களும் வரவேற்கப்பட்டு, பானமும், சிற்றுண்டியும் அளிக்கப்படுவர். மாப்பிள்ளை வீட்டார் பின்பு தங்கள் ஜாகைக்குச் செல்வர். இதற்கு பரிச்சவான் என்று பெயர். உடனே பெண் வீட்டார் சில பெண்களோடு உணவும் நீரும் எடுத்துக்கொண்டு மாப்பிள்ளை வீட்டார் ஜாகைக்குச் சென்று அவர்களைச் சாப்பாட்டிற்கழைப்பர்; மாப்பிள்ளை வீட்டாரின் பெரியோர்களுக்குச் சன்மானம் அளிப்பார்கள். இதற்கு துர்ச்சாக் என்று பெயர்.

சிறிது சென்ற பிறகு மாப்பிள்ளை வீட்டார் பெண்வீட்டிற்குச் செல்வார்கள். பெண், மண்டபத்திலமர்ந்திருப்பாள். மாப்பிள்ளையின் அண்ணன் அவளுக்கு ஆடையணிகள், தின்பண்டங்கள், வாசனைப் பொருள்களை அளிப்பான். கோபுரம் போன்று அடிபெருத்து நுனி சிறுத்த ஒரு பெட்டியில் அவைகள் கொண்டுவரப்படும். இந்த ஒரு சந்தர்ப்பத்தில்தான் மாப்பிள்ளையின் அண்ணன் பெண்ணைப் பார்க்கவோ தொடவோகூடுமென்று கருதப்படுகிறது. இதற்குக் கன்னியா நிரீக்ஷன் (பெண்ணைப்பார்ப்பது) என்று பெயர். அதற்கப்புறம்தான் முக்கியத் திருமணச் சடங்கு மணமக்கள் மண்டபத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள். மாப்பிள்ளை வீட்டார் அளித்த ஆடையணிகளைப் பெண் புனைந்தும் பெண் வீட்டார் அளித்த ஆடைகளை மாப்பிள்ளை அணிந்தும் இருப்பர் கடவுளை வணங்கியபின் பெண்ணின் பெற்றோர்கள் பெண்ணை மணமகனுக்கு முறைப்படி தானம் செய்வர். இருசாராரின் நெருங்கிய உறவினரும் அங்கிருப்பர்.

பீஹாரில் கோஷா வழக்கம் மிகக் கடுமையானது. ஆகவே அப்பொழுது மாப்பிள்ளை வீட்டு ஆண்களில் சடங்குக் காரியங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், நடத்தி வைக்கும் ஐயரும் தவிர வேறு யாரும் அனுமதிக்கப்படார்கள். பெண் வீட்டாரைச் சேர்ந்த பெண்கள் இருப்பார்கள். அங்கிருப்பவர்களெல்லாம் சாட்சிகளாகக் கருதப்படுகிறார்கள். கடவுள், சூரியன், சந்திரன், தீ, நீர், மண், கல், ஆகியவைகளுக்கெல்லாம் இவ்வைபவத்தைப் பார்த்துக் களித்து வாழ்த்துமாறு பிரார்த்தனை செய்யப்படும் தாங்கள் ஒருவர்க்கொருவர் உண்மையாக, விசுவாசமாக இருப்பதாக மணமக்கள் சிலமந்திரங்களைச் சொல்லி உறுதி கூறுவர். மணமக்கள் நெருப்பை வலம்வருவர். மணமகன் மணமகள் நெற்றியில் சிந்தூரமிடுவான். அதற்குச் சிந்தூரதானமென்று பெயர் இதோடு இச்சடங்கு முடிவுறும். இச்சிந்தூரம் மணப்பெண்ணின் சுற்காலத்திற்கறிகுறி. கணவன் உயிரோடிருக்கும் வரை அவள் அதை அணிந்து கொள்வாள்.

முஸ்லிம்களுக்கிடையில் மாப்பிள்ளை வீட்டார் வந்த பிறகு பரி என்ற சடங்கு நடைபெறும். அவர்கள், தங்களுடைய ஜாகையிலிருந்து பெண் வீட்டிற்கு ஆடைகள், எண்ணெய், இனிப்புத் தின்பண்டங்கள், பழங்கள் முதலியன கொண்டு மேள சகிதம் செல்வார்கள். இக்கூட்டத்தில் முதலில் அடிபெருத்து நுனி சிறுத்த ஒருகூடையில் - இதன்பெயர் சடரா வாசனைப்பொருள்கள், பழங்கள், இனிப்புணவுகள், சாயமேற்றிய நூல் சிட்டங்கள், அரிசி இன்னும் மற்றவையும் ஹிந்துக்களைப்போன்றே கொண்டு போகப்படும். பெண்வீட்டார் இவைகளை வாங்கிக்கொண்டபின் அவர்களும் மாப்பிள்ளைக்கு ஆடை முதலியவைகளைக் கொடுப்பார்கள். இதற்கு கில்அத் என்று பெயர். மாப்பிள்ளை இந்த ஆடைகளை அணிந்து கொள்வான். அதுவரை நிக்காஹ் ஆகிய முக்கியச் சடங்கு நடைபெறுவிட்டால் அது இப்பொழுது நடைபெறும்.

ஹிந்துக்களிடையில் மாப்பிள்ளை பெண் நெற்றி சிந்தூரமிடுவது போல இவர்களில் மாப்பிள்ளையில் பெண் தலையில் சந்தனமிடுவான் இதற்கு மாங்க்பரி என்றுபெயர். இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமுள்ள செய்யுட்கள் சொல்லப்படும்; பாட்டுக்கள் பாடப்படும். ஹிந்துக்களுக்குள்ளும் தூர்ச்சக், கன்னியானிரீக்ஷன் முதலிய சமயங்களில் படித்த புலவர்களும் சிறுமியர் சிறுவரும் சிரத்தையோடும் கேலியாகவும் பாட்டுக்கள் பாடுவதுண்டு. தர்க்கப் பேச்சுக்கள் நடத்துவதுமுண்டு. ஒவ்வொரு சமய சந்தர்ப்பங்களிலும் ஹிந்து முஸ்லிம் பெண்கள் பொருத்தமான பாட்டுக்களை பாடுவார்கள். இவைகள் ராகத்திலும் பொருளிலும் ஒன்றாகவே இருக்கும். (தொடரும்)

—இந்தியா பிரிக்கப்பட்டால்..........

பாபு ராஜேந்திரபிரசாத்.

---


## ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —


---

## " சேர்ந்து வாழ்வோம் "

எட்டவுன்ஸ் ரேஷனிலும் குறையப் போவுதாம்
இப்பாரில் ஏழைமக்கள் என்ன செய்வாங்க ?
கெட்டிடாமல் ஜனங்களெல்லாம் முதன்மை பெறவே
கீர்த்தியோடு மந்திரிகள் வந்துதவனும்.

இப்பஞ்சம்போல் எங்கள் வாழ்வில் கண்டதுமில்லே
இதுவுமொரு சோதனையோ யென்னமோ
தெரியல்லே !
கப்பலேறி அடுத்ததேசம் போவோம் யென்றாலும்
கவலைக்கிட மாயிருக்கு எண்ணிப்பார்த்
திட்டோம்.

உடுத்திக்கிரக் கடைக்கிப் போயித் துணியைக்
கேட்டாலும்,
ஒருபங்கிற்கு மூணுபங்குவிலையும் சொல்லுறாங்க
தடுத்துக் கிடுத்துக் கேட்டுப்பார்த்தால் இல்லை
யென்கிறாங்க
சாமிதுணை யென்று நாங்கள் வாங்கிக்கட்டணும்

கள்ள மார்க்கட்டோ இக்காலத்துப் ஒழியவுமில்லே
கஞ்சிக்கோ கொஞ்சங்கூட வழியுமில்லே !
தெள்ளமுதமான எம்மான் காந்தி தாதா
திருவுள்ளம் போல்நாமே சேர்ந்து வாழ்வோம்.

(பொம்மன்)

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 25—10—'48 திங்கட்கிழமை { இதழ் 38


## ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கம்.

மஹாத்மாஜீ கொல்லப்பட்டார். ரா. சு. சே. சங்கத்துக்கு தடைவிதிக்கப்பட்டது இன்றுதடையை நீக்க முயற்சிகள் நடக்கின்றன. தன்கொள்கைகள், முறைகளை பிரசாரம் செய்து அங்கத்தினர்களை திரட்ட சங்கத்துக்கு சுதந்திரம் அளிக்க வேண்டுமென்று சில இடங்களில் கேட்கப்படுகின்றது.

டில்லியில் லட்சத்து ஐம்பதினுயிரம் கையெழுத்துக்களடங்கிய மஹஜர் அரசாங்கத்துக்கு அனுப்பபபட்டதாம். ஜனங்களுக்கு விஷயத்தை சொல்லாமலேயே கையெழுத்துக்கள் வாங்கப்பட்டதாகக்கூட சில பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. அது உண்மையாகவுமிருக்கலாம்; மஹஜர்களில் அப்படி கையெழுத்து வாங்குவதும் உண்டு. இதர இடங்களில் கூட இதைப்போலவே நடந்துமிருக்கலாம். அதைக் குறித்து சர்ச்சை செய்பவேண்டிய அவசியமேயில்லை. முக்கியமான ஒரு விஷயத்தை மட்டும் தெளிவு படுத்த விரும்புகிறோம்.

பகிரங்கமாகவும் அந்தரங்கமாகவும் மக்களிடையே வகுப்பு துவேஷத்தை பரப்ப சில ஸ்தாபனங்கள், தனி நபர்கள் சுதந்திரத்துடன் விடப்பட்டதே இந்தியாவுக்கு எற்பட்ட களங்கத்துக்கு காரணமென்று மகாத்மாஜீ கொலைக்குப் பிறகு இன்று அரசாங்கத்திலிருந்து வரும்பொறுப்பு வாய்ந்தவர்கள் முடிவு செய்தார்கள். நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய ஸ்தாபனங்களில் ரா. சு. சே. சங்கமும் ஒன்று என்று தீர்மானிக்கப்பட்டது. அதன் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சர்க்கார் எடுத்த நடவடிக்கைக்குப்பிறகு நிலைமை திருந்த ஆரம்பித்தது. இன்று எதிர்கால அமைதியிலும் சமாதானத்திலும் ஓரளவு நம்பிக்கையும் எற்பட்டிருக்கிறது. இந்நிலையில் வகுப்புத் துவேஷமும் பலாத்காரமும் பரவுவதற்கு பெருமளவு பொறுப்பாளியாக இருந்த ஒரு ஸ்தாபனத்தின் மீதுள்ள தடையை நீக்குவதென்பது எந்த அளவுக்கு நியாயம், உசிதம் என்ற விஷயத்தை அரசாங்கமேதான் முடிவு செய்ய வேண்டும்.

சங்கத்தின் கொள்கைகள் பயங்கரமானவை. மத அடிப்படையற்ற எந்த ஒரு ஜனநாயக அரசாங்கமும் அதை சகிக்க முடியாது இந்தியாவிலுள்ள முஸ்லிம்களை வெளியேற்றுவதே அவர்களுடைய நோக்கம். ஹிந்து, முஸ்லிம், சீக்கியர், கிருஸ்துவர்: முதலிய இதர சமூகத்தினரின் கூட்டு ஆட்சியில். அவர்களுக்கு நம்பிக்கையில்லை. இந்தியாவில் கலப்பற்ற ஒரு ஹிந்து ராஜ்யம் அமைப்பதே அவர்கள் லட்சியம் இந்தியாவின் பலத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அதுவே சிறந்த வழியென்றும் நம்புகின்றனர்.

காங்கிரஸ் அனைவருக்கும் பொதுஸ்தாபனம். எல்லா சமூகங்களும் அடங்கிப இந்திய சமூதாயத்தின் முன்னேற்றமே அதன் குறிக்கோள். எம்மதத்தவராயினும் இந்தியர் அனைவருக்கும் சம உரிமை வழங்குவதே அதன் கொள்கை. காங்கிரஸை சங்கத்தினர் எதிர்ப்பதற்கு காங்கிரஸின் இந்தக் கொள்கைதான் காரணம். இது ஒரு கட்சி அல்லது ஸ்தாபனத்தின் கொள்கையல்ல. ஜனநாயகத்தின் அடிப்படையாகும். அரசியலில் மாறுபட்ட கருத்துள்ளவர்களும் கூட இந்தக் கொள்கை பொருத்தவரை ஆட்சேபிக்க நியாயமில்லை.

நமக்கு தெரிந்த வரையில் ரா. சு. சே. சங்கம் ஜனநாயகத்துக்கு எதிரான தன் கொள்கையை இது வரைமாற்றிக்கொள்ள வில்லை; மாற்றிக்கொள்ளவும் இயலாது. ஜனநாயகத்துக்கு எதிரான வகுப்புத் துவேஷமே அதன் அடிப்படை. ஹிந்து, முஸ்லிம், சீக்கியர், கிருஸ்துவர் முதலிய இதர சமூகத்தினரைக் கொண்ட ஐக்கிய சமுதாயத்தையும் அவர்களுடைய ஆட்சியையும் ஒப்புக்கொண்டு, ஹிந்துராஜ்ய லட்சியத்தைக் கைவிட்ட பிறகு சங்கம் இருக்க வேண்டிய அவசியமே இருக்காது. தேசீய சேவை செய்து வரும் ஜனநாயக நோக்கமுள்ள எத்தனையோ ஸ்தாபனங்களிருக்கின்றன. அவற்றில் சேர்ந்து சங்க மெம்பர்கள் சேவை செய்யலாம்

சங்கத்திடம் அனுதாபமுள்ள சில பத்திரிகைகளும் ஸ்தாபனங்களும் வட்ட வடிவமான வார்த்தைகளால் தெளிவற்ற முறையில் சர்க்காருக்கு விஸ்வாஸமாய் நடந்து கொள்ளப்போவதாக உறுதியளிக்கும் வேலையை சில தினங்களாக ஆரம்பித்திருப்பது வாஸ்தவம்தான். ஆயினும் தங்கள் கொள்கைக்கு மாறாக

# தஞ்சை ஜில்லா அரசியல் மஹாநாடு,

## — அதிராம்பட்டணம். —

அன்பர்களே :

8-10-48 உ அதிராம்பட்டணம் ரெஸ்டு ஹவுசில் நடைபெற்ற பட்டுக்கோட்டை தாலுக்கா பிரதம கமிட்டிகளின் தலைவர்கள், காரியதரிசிகள், காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் கீழ்க்கண்ட நிர்வாகஸ்தர்கள் அடங்கிய வரவேற்பு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. மகா நாட்டை நவம்பர் மாதத்தில் அதிராம்பட்டணத்தில் நடத்துவதென்றும், மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அவர்களை மகாநாட்டை திறந்து வைக்க அழைப்பதென்றும், தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மகா நாட்டை வெற்றிகரமாக நடத்திவைக்க இத்தாலுக்கா வாசிகள் தாராளமாக பொருள் உதவி செய்து ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். குறிப்பாக அதிராம்பட்டணத்திலுள்ள இந்து முஸ்லிம் சகோதரர்கள் தங்கள் பூர்ண ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளித்து மகாநாட்டை சிறப்பாக நடத்திவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**வரவேற்பு கமிட்டி நிர்வாகஸ்தர்கள்.**

தலைவர் :- ஸ்ரீ V. நாடிமுத்து பிள்ளை, M. C. A, பட்டுக்கோட்டை.

உபதலைவர்கள் :-

ஸ்ரீ A. கிருஷ்ணசாமி வாண்டையார், M.L A. பூண்டி.
,, A. M. சாமிநாதசெட்டியார்,ஜி கா கமிட்டி நாகை.
,, N. ராமசாமி, T.R.M. எஸ்டேட், தம்பிக்கோட்டை.
,, T. R சுப்பிரமணிய பிள்ளை, மாவக்காடு.
,, R. A. அருணாசலய்யர், அதிராம்பட்டணம்.
,, K. S. சாம்பசிவ அய்யர், குன்னியூர்.

பொதுக்காரியதரிசி ;-

,, N. சுந்தரேச தேவர், தம்பிக்கோட்டை.

உப காரியதரிசிகள் :-

,, T. K. சீனிவாசய்யர், தஞ்சை.
,, R.M.கோவிந்தசாமிசெட்டியார், பட்டுக்கோட்டை.
,, S. S. முஹம்மது இபுராஹீம், அதிராம்பட்டணம்.
,, R. வரதராஜலு ,,
,, T. R. வெங்கட்ட சுப்பிரமணியம். ,,
,, S நடராஜ ஓந்திரியர், நம்பிவயல்.

பொக்கிஷதார் :-

ஸ்ரீ S. வெங்கட்டராமய்யர், பட்டுக்கோட்டை.

அதிராம்பட்டணம் 14-10-48 } இங்ஙனம் **வரவேற்பு கமிட்டியார்**

---

அவர்கள் எதுவும் சொல்லிவிடவில்லை. ஜனநாயக அடிப்படையில் தங்கள் வகுப்பினரைப் போலவே இதர வகுப்பினருக்கும் உரிமைகள் வழங்கப்படுவதற்கு சம்மதிபபதாக பஹிரங்கமாய் அறிவித்து, தங்களுடைய நடவடிக்கைகளால் சீரழிந்த சூழ்நிலையை சீர்செய்வதில் சர்க்காருடன் ஒத்துழைக்க முன்வராத வரை இதைப்போன்ற மஹஜர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அபாயகரமான காரியமாகும். அதனால் காங்கிரஸுக்கும் காங்கிரஸ் சர்க்கார்களுக்கு மட்டு ஜனநாயகத்துக்கே தீங்கு ஏற்படக்கூடும் இன்று ஜனநாயகம் பலமடைய வேண்டியதவசியம்.

ஜனநாயக ஆட்சியில் சுதந்திரமாய் பேசவும் சுதந்திரமாய் நடமாடவும் உரிமை இருக்க வேண்டியது அவசியந்தான். அதற்காக உள்நாட்டு அமைதியையும் சமூக நலனையும் அலட்சியம் செய்து விட முடியாது. இந்த லட்சியங்களுக்காக தனி நபர்கள், ஸ்தாபனங்களின் சுதந்திரத்தை பறிப்பது நியாயத்துக்கும் ஜனநாயகத்துக்கும் எவ்விதத்திலும் மாறுபட்டதல்ல குறிப்பாக நாடு நெருக்கடியான கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கையில் சிறந்த கொள்கைகளைக் கடை பிடித்து முன்னேற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கையில் தனிநபர் சுதந்திரத்தின் பெயரால் அமைதிக்கு பங்கம் ஏற்படுவதற்கு சர்க்கார் இடமளிக்க முடியாது தனி நபர்கள் தற்காலீக வற்புறுத்தல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அடிப்படைக் கொள்கையை அபாயத்துக்கு உள்ளாக்க நம் அரசாங்கம் சம்மதிக்காதென்று நம்புகிறோம்.

---


## வரவேற்கிறோம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய, ஜனநாயக, சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிறோம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். இதர விபரங்கள் தபால் மூலம்.

**மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.**

# இந்தியாவும், காமன்வெல்த் மஹாநாடும்

லண்டனில் கூடிய காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மஹாநாடு முடிவடைந்து விட்டது. அயர்லாந்தைத் தவிர இதர டொமினியன்கள் மஹாநாட்டில் கலந்து கொண்டன. காமன்வெல்தில் இருந்துகொண்டு செல்வத்தை அள்ளிக்குவிக்கும் ஆசை அயர்லாந்துக்கு இல்லை.

எதிர்பார்த்தபடியே மஹாநாட்டில் கம்யூனிஸ்ட் அபாயமே முதல் முதலாக விவாதத்துக்கு வந்தது. இன்று ஆசியா, ஐரோப்பா கண்டங்களை கம்யூனிஸம் பயமுறுத்துவது உண்மைதான். ரஷ்யாவையும், ஜெர்மனியையும் சேர்த்து பாலம் அமைப்பதன் மூலம் பிரான்ஸிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்கும் ஜெர்மனிக்குமிடையே தொடர்புண்டாக்க முயற்சிகள் நடக்கின்றன. பர்மா, இந்தோனேஷ்யா, மலேயாவுக்கு அடுத்தபடியாக இந்தியா, பாகிஸ்தான் கட்டம் வரலாம். காமன்வெல்த் மெம்பர்கள் ஒரு முகமாகச் சேர்ந்து பலனளிக்கத்தக்க நடவடிக்கை எடுத்தாலன்றி அபாயத்தை தடுக்கமுடியாது. எனவே மஹாநாட்டில் முதல் முதலாக இந்தப் பிரச்னையை எடுத்துக்கொண்டதில் ஆச்சரியமில்லை

ஆக்கிரமிப்பில் இறங்குபவர்களை தடுத்து யுத்த அபாயங்களை சமாளிப்பதற்காக ராணுவ படைகளை பலப்படுத்த வேண்டுமென்றும் ராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகளால் மட்டுமின்றி சமூக, பொருளாதார நலன்களை அபிவிருத்தி செய்வதன் மூலமும் சுதந்திரத்தை பாதுகாத்து வர வேண்டுமென்றும் மஹாநாட்டில் பொதுப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த மஹாநாடு பிரிட்டனுக்கும் பிரிட்டிஷ் ஆட்சிக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாயினும் சமீபத்தில் விடுதலை பெற்ற இந்தியா, பாகிஸ்தான், இலங்கை டொமினியன்களுக்கு அதைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலந்து பெருமளவுக்கு தென் ஆப்பிரிக்காவின் நலன்களும் பிரிட்டிஷ் நலன்களும் ஒன்று. அவர்கள் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள் பிரிட்டன் அவர்களுக்கு தாயகத்தின் அந்தஸ்தை வகிக்கின்றது. ஜாதி, மதம், கலாச்சாரம், பாஷை ஒன்றாய் இருப்பது ஒருபுரமிருக்க அரசியல் பொருளாதார கண்ணோட்டத்துடன் பார்த்தாலும் அவர்களுடைய நலன்கள் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய வாழ்வும் தாழ்வும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டு குறிப்பாக தாய்நாட்டுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்தியா, பாகிஸ்தான், இலங்கையின் நிலைமையே வேறு பிரிட்டனுடன் இவர்களுக்கு எவ்வித சம்மந்தமுமில்லை. பிரிட்டனிடமிருந்து இவர்கள் எவ்விதமான பிரயோஜனத்தையும் என்றுமே அடைந்ததில்லை. அதற்கு மாறாக பிரிட்டன் இவர்களை தலை தூக்கவிடவில்லை.

ஜனத்தொகையிலும், மூலப்பொருள்களிலும் ஆஸ்திரேலியாவைவிட இந்தியா ஐம்பது பங்கு பெரிது. ஆயினும் ஆஸ்திரேலியாவை விட இந்தியாவின் வருமானம் குறைவு.

ஒரு லாகூருக்கு சமமான ஜனத்தொகையைக் கொண்ட நியூஸிலாந்தைக் காட்டிலும் பாகிஸ்தான் ஏழை நாடாகவே இருக்கிறது. இதற்கெல்லாம் பிரிட்டனே பொருப்பாளி.

பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா பொருளாதார பலமும் தொழிலியல் முன்னேற்றமும் கொண்டிருக்கின்றன. அங்குள்ள மக்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரம் நடத்துகின்றனர். எனவே அவர்கள் தங்களுடைய உற்பத்தி சக்தியின் ஒரு பகுதியை யுத்த உற்பத்தியில் சுலபமாய் ஈடுபடுத்த முடியும். அவர்களுக்கு மார்ஷல் உதவியும் அமெரிக்க டாலர்களும் காத்துக்கொண்டிருக்கின்றன.

இந்தியாவுக்கு அவ்வித வசதிகள் இல்லை. முன்னேற்றமடைந்துள்ள நாடுகளே தங்களுடைய பாதுகாப்புக்காக கடன் வாங்க வேண்டியிருக்கையில் இந்தியா யுத்த முஸ்தீப்புக்களில் பங்கெடுத்துக்கொள்ள எவ்வாறு முடியும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் நாட்டின் செல்வத்தைப்பெருக்குவதுமே இந்தியாவை எதிர்நோக்கும் முதல் பிரச்னை. எல்லாவற்றையும் புதிதாக நிர்மாணிக்க வேண்டிய அளவுக்கு பிரிட்டன் இந்நாட்டைசுரண்டிவிட்டது. நம்முடைய உற்பத்தி சக்திகள் பூராவையும் அதில் ஈடுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அந்நிய நாட்டு நிபுணர்களின் சேவைகளை பெறுவதற்கும் யுத்த உற்பத்தி தொழிற்சாலைகள் அமைப்பதற்கும் நம்மிடம் பணமில்லை.

மார்ஷல் உதவியைப் போன்ற உதவிசெய்ய சிலர் முன்வரவும் கூடும். அம்மாதிரி நமக்குத் தேவையில்லை. அதனால் ஏராளமான ரூபாய் பிரிட்டன், அமெரிக்க யுத்த தளவாடங்களுக்காக செலவாகும். அநேகமாய் இன்னொரு யுத்தமே நடக்காமலும் போய்விடலாம். அம்மாதிரி நினைக்கவும் இடமிருக்கிறது.

## திருப்பனந்தாள்

# ஸ்ரீலஸ்ரீ தம்புரான் அவர்களின் நல்லுபதேசம்.

வெங்கிட்டராமய்யர் M. L. A., K. M ஷரீப், ஆஸாத் ஆசிரியர் மூவரும் ஸ்ரீலஸ்ரீ அவர்களின் பேட்டிக்காக சென்றனர். ஆஸாதின் பிரதிகள் அன்னாரின் பார்வைக்கு வைக்கப்பட்டன. அதைப் பார்த்துவிட்டு அவர் கூறியதாவது:—

முஸ்லிம்களிடையே முக்கியமாக பெண்களுக்கு கல்வி போதிப்பது மிக தேவை பெண்கள் கல்வி கற்றால் குடும்பங்களில் சுலபமாக கல்வி பரவிப் போகும். அதனால் அவர்கள் சிறுபிராயத்துடனிருந்தே மற்ற சமூக பிள்ளைகளுடன் ஒற்றுமையாக இருந்துவர பழக்கமேற்பட்டுவிடும். நல்ல வயலில் முளைக்கும் பயிரைப்போல் சமூகம் முன்னேறும். தெய்வத்துக்கு முன்னால் ஜாதி, மதம், ஆண், பெண், என்ற வித்தியாசம் கிடையாது. மசூதிகளில் வெள்ளிக்கிழமை தோறும் ஒற்றுமைப் பிரசாரம் செய்துவந்தால் நல்ல பலன் ஏற்படும். திருகுரானை இஸ்லாமுக்கும் முஸ்லிம்களுக்கும் அளவுகோலாக வைத்து முஸ்லிம்களிடையே பிரசாரம் செய்தால் உண்மையான பலன் அளிக்கும். ரூபங்கள் வேறு விதமாக இருப்பினும் உண்மையென்பது எல்லா வேத புஸ்தகங்களிலும் ஒன்றாகத்தான் இருக்கும்.

ஆசிரியர், ஆஸாத் ஒரு அரசியல் பத்திரிகை என்று சொன்னபொழுது அவர் அதை திருத்தும் வகையில் மதமின்றி அரசியல் மட்டும் பிரயோஜனம் அளிக்காது மதமும், அரசியலும் சேர்ந்து இருந்தால்தான் மானிடவர்க்கத்துக்குப் பலன் ஏற்படும். வெறும் அரசியல் வாதிகளால் உலகத்துக்கு நன்மை பயக்கமுடியாது. மேலும் அவர்கள் வெற்றியடைவதும் சந்தேகமே. இதே காரணத்தினால் ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டான். ஏழை மகாத்மா வெற்றியடைந்தார். மகாத்மாவுக்கு எதிரில் இந்த தேசத்தை சிருஷ்டி செய்த ஒரு நாயனுடைய பிர்மாண்டமான சக்தி இருந்தது. ஆனால் ஹிட்லர் தன் தேசத்தையே தெய்வமாக மதித்தான். படிப்படியாக உங்களுடைய பிரசாரவேலை வளரவேண்டும். முஸ்லிம்களை அணுகி தெய்வ வேலையில் ஈடுபடுத்தவேண்டும். ஒரு தனி மனிதன் செய்யும் பிரார்த்தனையைவிட ஒரு கூட்டம் சேர்ந்து செய்யும் பிரார்த்தனையே அதிகம் பலனளிக்கும். முஸ்லிம் பெண்கள் ஏன் பிரார்த்தனையில் கலந்துகொள்ளக்கூடாது என்று கேட்டபொழுது ஆஸாத் ஆசிரியர் வடநாட்டிலும், மக்கா மாநகரிலும் அவ்விதமே பெண்களும் கலந்துகொள்வதாக கூறினார்.

மேலும் ஸ்ரீலஸ்ரீ அவர்கள் சொன்னதாவது:— இந்தியா ஒரு பரிசுத்தமான பூமியாகும் ஹிந்து மதம் பரந்த நோக்கமுடையது. இந்தியா புத்த மதத்திற்கும் சமண மதத்திற்கும் வளர வசதியளித்தது. அப்படியே முஸ்லீம்களும் இங்கு வந்து பரவினர். இந்த பூமியின் பரிசுத்தத்தன்மை எந்த மதம் வந்தாலும் வளரச் செய்திருக்கிறதேயன்றி குறைகச் செய்யவில்லை. எப்படி இந்திய மண்ணின்பேரில் கங்கை, யமுனை, கோவில், குளங்கள், குருத்துவார்கள், சர்ச்சுகள் பரிசுத்தத்தன்மை வாய்ந்தவைகளாக இருக்கின்றனவோ அப்படியே மசூதிகளும் இங்கு இருந்து வருகின்றன. மகாத்மா காந்தியும் இதே நோக்கத்துடன்தான் வேலை செய்துவந்தார். சமத்துவம், சகோதரத்துவம் எல்லா மதங்களிலும் இருக்கும் ஒரு உண்மை. ஒற்றுமையை உண்டாக்குவதற்கான திருகுரான், ஹிந்து, கிருஸ்தவ மதபோதனைகளை ஆஸாதில் பிரசுரிக்குமாறு உபதேசித்தார்.

அவ்விதம் செய்வதாக ஆஸாத் ஆசிரியரும் வாக்களித்தார்.

---

இந்தியா அரசியல் ஆதிக்கவேட்டையை விரும்பவில்லை. கூட்டுப்பாதுகாப்பில் பங்கெடுத்துக்கொள்வது நம்மை ஆங்கிலோ அமெரிக்க கோஷ்டியுடன் இணைத்துவிடுமென்பது நிச்சயம். அது நம் கொள்கைகளுக்கும் நலன்களுக்கும் புறம்பாகும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தாலும் அமெரிக்க முதலாளிகளாலும் அதிகமாய் பாதிக்கப்பட்ட நாடுகள் தூரக்கிழக்கு, மத்திய கிழக்கு நாடுகளும் இந்தியாவும்தான். இந்த நாடுகளிலுள்ள மக்கள் சாம்ராஜ்ய ஆதிக்க அரசியலின் ஆயுதமாக இருப்பதை எண்ணிப்பார்க்கவும்முடியாது. இதனால் இன்னொரு கோஷ்டிக்கு அனுதாபம் காட்டவேண்டுமென்பது அர்த்தமேயல்ல. ஒன்றுபடுவதிலேயே இந்த நாடுகளின் நலன் அடங்கியிருக்கிறது.

ஆக்ரமிப்பாளர்களுக்கு எதிராக கூட்டுப்பாதுகாப்பு முறை பலனளிக்கத்தக்கது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கோஷ்டி அரசியலிலிருந்து விலகி இருக்கவேண்டியது அவசியம் அதற்கு இந்தியா, பாகிஸ்தானிடையே உள்ள அபிப்பிராய பேதங்கள் நீங்கி ஒற்றுமை ஏற்படவேண்டும் இரண்டு நாடுகளுக்கு மிடையே ஒற்றுமையால் கிழக்கு பிராந்தியத்தின் பிரச்னை தீர்ந்து பலம்வாய்ந்த நடுநிலைமை வகிக்கும் ஒரு புதிய கோஷ்டி உருவாக முடியும். தான் யுத்தத்திலிருந்து விலகி யிருப்பதுமட்டுமின்றி ஆக்ரமிப்பாளர்களை தடுக்கக்கூடிய சக்தி வாய்ந்ததாகவும் திகழ முடியும்.

எல்லாவற்றையும் கவனித்தே நம்முடைய நம்பிக்கைக்குப பாத்திரமான பண்டித ஜவஹர்லால் நேரு முடிவு செய்வாரென்று இந்தியர்கள் நம்பலாம்.

# சமாதானத்தின் சாவி கிடைக்குமா?

தேவையானதை எடுத்து உபயோகித்துக் கொள்ள உலகத்திலுள்ள எல்லா களஞ்சியங்களின் சாவிகளையும் கடவுள் மனிதனிடம் ஒப்படைத்தார். ஆனால் அவனுக்கு மிகவும் அவசியமாயிருந்த ஒரு பொருளை ஏதோ ஒரு மர்மமான அறையில் வைத்துப் பூட்டி அந்த ஒரு சாவியை மட்டும் மனிதனின் சிந்தனைக்கும் எட்டாத இடத்தில் ஏனோ ஒளித்து விட்டார்! யாராவது ஒரு அசாதாரண மனிதன் தேடி அலைந்து அறையைக் கண்டு பிடித்து விட்டாலும் அதன் சாவியைத்தேடி எடுப்பது முடியாத காரியம். தேடுவதில் வாழ்க்கை பூராவும் கழியவேண்டியது தான்.

உலகமும் அதில் மனிதனும் தோன்றி எத்தனையோ கோடி வருஷங்களாயின. மனிதன் எவ்வளவோ முன்னேறி விட்டான். மிருகங்களிலிருந்து ஆரம்பித்து இயற்கையை வசப்படுத்தியிருக்கிறான். இவ்வளவும் போதாமல் இன்று சந்திர, சூரிய, நட்சத்திர மண்டலங்களுக்குத் தாவ முயலுகிறான். ஆயினும் சமாதானத்தின் சாவியை மட்டும் கண்டானில்லை. யுகங்களுக்குப்பிறகு யுகங்கள் கழிந்தன. தலைமுறைகள் மறைந்து தலைமுறைகள் தோன்றின. பெரிய பெரிய தத்துவ ஞானிகள், விஞ்ஞானிகள், அரசியல் வாதிகள் மதவாதிகள் பிரசாரகர்களால்கூட அதை தேடிப் பிடிக்க முடியாமலேயே போய்விட்டது.

இருபதாவது நூற்றாண்டின் அரசியல் வாதிகள் லேசானவர்களா! அவர்கள் ஆராய்ச்சி செய்து சமாதானத்தின் சாவி யுத்தத்தினுள் ஒளிந்துகொண்டிருப்பதாக கண்டு பிடித்து விட்டனர். முன்னால் நடந்த யுத்தங்களெல்லாம் யுத்தங்களா! பூ! சிறுபிள்ளைகளின் விளையாட்டு! யுத்தமென்றால் உலகம் பூராவையும் பாதிக்க வேண்டும் மனிதர்கள் மட்டுமின்றி பாதாளத்திலும், ஆகாயத்திலுமுள்ள ஜீவராசிகளும்கூட நடுங்கும்படி நவீன ஆயுதங்களைக்கொண்டு உண்மையாகவே ஒரு யுத்தம் நடந்தாலன்றி சமாதானத்தின் சாவி கிடைக்க முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது.

1914-ல் மஹாயுத்தம் ஆரம்பமாயிற்று. யுத்தம் முடிந்தவுடன் சமாதானத்தின் சாவி கைக்கு வரும் பிறகு என்ன? சமாதானமே சமாதானம்! சுபிட்சமே சுபிட்சம்! என்று பறை சாற்றினார்கள்.

யுத்தமென்னமோ முடிந்தது. சமாதானத்தின் சாவி மட்டும் கிடைக்கவில்லை. திரும்பவும் நிபுணர்கள் ஆராய்ச்சி செய்ததில் போதிய அளவுக்கு கோர யுத்தம் நடக்கவில்லையென்ற உண்மை வெளியாயிற்று. ஐந்து வருஷங்கள் வரை நீடித்தும் கூட உலக ஜனத்தொகையில் அரை சத விகிதத்தினர் அதாவது ஒரேஒருகோடி மக்களுக்குமட்டும் நிரந்தர சமாதானத்துக்கு சீட்டு கொடுத்தனுப்பிய யுத்தமும் ஒரு யுத்தமா! தூ! இது போதாது. இன்னும் பெரிய அளவில் யுத்தம் நடந்தாலன்றி சமாதான லட்சியத்தை அடைய முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது. 1939-ல் திரும்பவும் உலக மஹாயுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. ஆறு வருஷங்கள்வரை நடந்த இந்தயுத்தத்தினாலும் கேவலம் இரண்டு கோடி மக்களுக்குத்தான் சமாதான சீட்டு கிடைக்க முடிந்தது. அவ்வளவு லேசாக சமாதானத்தின் சாவி கிடைத்துவிடுமா?

நிபுணர்களுக்கு ரோசம் பிறந்தது. மேதைகளின் மீசைதுடித்தது அனைவரும் ஒன்றுகூடினார்கள். ஜோதிடர்களைக் கலந்துகொண்டு ஆராய்ச்சி கூடம் அமைக்க லேக் ஸக்ஸஸ் (வெற்றியின்வரி) தேர்ந்தெடுக்கப்பட்டது. நுட்பமாக ஆராய்ந்து, ஜாக்கிரதையுடன் பரிசீலித்து அக்குவேறு ஆணிவேறாக அலசிப்பார்த்த பிறகும் சமாதானத்தின் சாவி யுத்தம்தவிர வேறு எங்குமில்லையென்ற உண்மைதான் வெளியாகியிருக்கிறது. 1939-முதல் 1945 வரை நடந்ததை யுத்தமென்று சொல்ல முடியாது. ஆறு வருஷங்களில் அணுக்குண்டைப் போன்றதொரு பிரசாதம் இரண்டு இடங்களில் மட்டுமே வழங்கப்பட்டது. லட்சியம் கைகூட வேண்டுமாயின் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டைவிட்டு உண்மையாக நடந்துகொள்ள வேண்டும். கஞ்சத்தனமின்றி ரஷ்யாவுக்கு அணுக்குண்டு பிரசாதம் வழங்கப்பட வேண்டும். உலகத்தின் எல்லாப்பகுதிகளிலும் வாரி இறைத்தபிறகு எங்குமே சமாதானம் நிலவ முடியுமென்று முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இவ்விதம் நிபுணர்களும் மேதைகளும் மூளையை குழப்பிக்கொண்டிருக்க நம்முடைய மிஸ்டர் பெவின் துப்பு கண்டுபிடித்துவிட்டார். சமாதானத்தின் சாவி இந்திய மஹா சமுத்திரத்தில் எங்கோ ஒரு இடத்தில் புதைக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கும் இல்லையென்றால் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, மலேயா, ஸிரியா, இந்தோசைனா, இந்தோனேஷியா முதலிய இடங்களில் அல்லது மத்தியகிழக்கிலுள்ள எண்ணைக் கிணறுகளில் நிச்சயம் கிடைக்குமென்று மிஸ்டர் பெவின் இருக்கு மிடத்தைக் காட்டிவிட்டார். இனி தேவையுள்ளவர்கள் தேடி எடுத்துக்கொள்ளலாம். மலேயா, இந்தோசைனா, பர்மா, இந்தோனேஷியா, பாலஸ்தீனம், எகிப்து முதலிய இதர இடங்களில் முன்கூட்டியே மும்முரமாகத் தேடிவரும் ஐரோப்பியர்கள் இதிலும் வெற்றியடைந்து விடுவார்களோ வென்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

# பயங்கரக் கழுகு.

பிர்மாண்டமான அழகிய நகரம்; விசாலமான நீண்ட தெருக்கள்; உலகத்திலுள்ள பல ஜாதி மக்களும் பல்வேறு பாஷைகளைப் பேசிக்கொண்டு அங்கு நடமாடிக்கொண்டிருந்தனர்.

நானும் ஊரைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே ஒரு பெரிய அரண்மனையை சமீபித்தேன். அரண்மனைக்கு முன்னால் யாரையோ எதிர்பார்த்தவண்ணம் ஜனங்கள் திரளாக நின்றனர். விஷயம் என்னவென்று விசாரித்தேன். "முக்கியமான பல வியாஜ்ஜியங்களை தீர்ப்புசெய்ய பாதுஷா தர்பாருக்கு வருகிறார். நியாயம் வழங்கப்படுவதை வேடிக்கை பார்க்க ஜனங்கள் கூடியிருக்கின்றனர்" என்று ஒருவன் அறிவித்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கட்டியக்காரர்கள் கட்டியங்கூற படைகள் புடை சூழ பாதுஷா வந்தார். தர்பார் மண்டபத்துக்குள் நுழைந்து நானும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துக்கொண்டேன்.

மண்டபத்தின் நடுவே அமைக்கப்பட்டிருந்த மேடைமீது தங்க ஆசனத்தில் பாதுஷா அமர்ந்தார். வலதுபுரம் முப்தியும், இடதுபுரம் அரசாங்கத்தின் பிரதம அதிகாரியும் வெள்ளி நாற்காலிகளில் காட்சியளித்தனர். "குற்றவாளிகள் ஆஜராகட்டும்!" என்று பாதுஷா உத்திரவிட்டார்.

புலிக்கூண்டு திறக்கப்படுவதைப் போல் முன்னாலிருந்த பெரிய இரும்புக் கதவு திறந்தது. பழுத்த ஒரு கிழவனை இரண்டு சிப்பாய்கள் இழுத்துவந்து நிறுத்தினர். கைதிக்கு நிமிர்ந்து நிற்கவும் சக்தியிருக்கவில்லை. "இவன் என்ன செய்தான்?" என்று பாதுஷா கேட்டார். "அரசாங்கத்தின் இலவச உணவு விடுதியிலிருந்து ஒரு மாவு மூட்டையைத் திருடினான்." என்று முப்தி குற்றஞ் சாட்டினான். "சாகப்போகும் காலத்தில் வெட்கமில்லாமல் திருடிய கிழட்டு நாய்" என்று கூடியிருந்த ஜனங்கள் கத்தினார்கள். அரசன் சாட்சிகளை விசாரித்தான். நெறிமுறை தவறாது நடக்கும் சிலர் குற்றச்சாட்டை ஊர்ஜிதம் செய்து சாட்சி கூறினர். முப்தியுடன் கலந்துபேசியபிறகு "கைதியைக்கொண்டு போய் முதலில் அவனுடைய கைகால்களை துண்டித்து பிறகு தலையை சீவுங்கள்" என்று அரசன் உத்திரவிட்டான். நரைத்த தலை அரசனுக்குமுன் சாய்ந்தது. கருணை காட்டும்படி கிழவன் கெஞ்சினான். ஆனால் சவுக்கால் அடித்துக்கொண்டே சிப்பாய்கள் கிழவனை இழுத்துக்கொண்டு போய்விட்டனர்.

சிறைக் கதவு திரும்பவும் திறந்தது. சிப்பாய்கள் ஒரு வாலிபனை இழுத்து வந்தனர். அவனுடைய முகம் வெளுத்திருந்தது, "இவன் செய்த குற்றமென்ன?" என்று அரசன் கேட்டான்.

"இவனுடைய கிராமத்தில் வரி வசூலிக்கச் சென்ற அரசாங்க அதிகாரியை கொன்றான்" என்று பிரதம அதிகாரி குற்றம் சாட்டினான். கூடியிருந்த அனைவரும் வாலிபனை சபித்தனர். சிப்பாய்கள் சாட்சி அளித்தனர்.

பிரதம அதிகாரியுடன் ஆலோசித்து "இவனை மரத்தில் தொங்கவிட்டு நரம்புகளைப் பிளந்து இரத்தத்தை வெளிப்படுத்துங்கள்" என்று அரசன் தீர்ப்பளித்தான். வாலிபன் நடுங்கிக்கொண்டே ஏதோ சொல்ல வாயெடுத்தான். சிப்பாய்களின் சவுக்கு பளீர் பளீரென்று விழுந்தது. இழுத்துச் செல்லப்பட்டான்.

இரும்புக் கதவு மீண்டும் திறந்தது. இம்முறை ஒரு அழகிய யுவதியை சிப்பாய்கள் கொண்டு வந்து நிறுத்தினர். அவள்மீது விபசாரக் குற்றம் சாட்டப்பட்டது.

"தூக்கிலிடுங்கள். கல்லாலடித்துக் கொல்லுங்கள்" என்று ஜனங்கள் கோஷித்தார்கள். யுவதியின் சிற்றப்பனே சாட்சி சொன்னான். பிரதம அதிகாரியிடம் கேட்டு "இவளை நிர்வாணமாக்கி கற்களால் அடித்துக் கொல்லுங்கள். சரீரத்தில் ஒரு துளி சதையும் இருக்கக் கூடாது ஜாக்கிரதை!" என்று அரசன் தீர்ப்பளித்தான். யுவதி குனிந்த தலையுடன் நின்றாள். ஜனங்கள் அரசனுடைய நியாயம், கருணை புத்திசாலித்தனத்தை மெச்சினர். நீண்ட ஆயுளுக்காகப் பிரார்த்தித்தனர். தர்பார் கலைந்தது.

நானும் தர்பாரை விட்டுப் புறப்பட்டேன் எல்லோரும் சிரித்துக்கொண்டிருக்க நான்மட்டும் அழுது கொண்டிருந்தேன். இவர்களும் மனிதர்கள் தானே! மற்றவர்கள் மட்டும் தேவர்களாக நடக்கவேண்டுமென்று எப்படி எதிர்பார்க்கின்றனர்? இவர்கள் மாத்திரம் குற்றம் செய்வதில்லையா? மற்றவர்களின் குற்றங்களை ஏன் மன்னிப்பதில்லை? அரசன் ஒருவனையும் கொலை செய்திருக்க மாட்டானா? முப்தி யாரையும் நிர்ப்பந்தித்து பணம் பறித்திருக்க மாட்டானா? அரசாங்க அதிகாரி எந்த ஒரு பெண்ணையும் ஏறெடுத்துப் பார்த்ததில்லையா? எலும்புக் கூடுகளை அஸ்திவாரத்தில் போட்டு தன்னுடைய ஆட்சிக் கட்டிடத்தை நிலை நிறுத்தியிருக்கும். அரசன் எல்லோரையும்விட அக்கிரமக்காரனல்லவா? கடவுள் பெயரைச் சொல்லிக் களவாடும் முப்தி மோசக்காரனில்லையா? தன்னுடைய குற்றங்களை போக்கிக்

கொள்ளாமல் மற்றவர்களின் குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் முனைந்திருக்கும் அரசாங்க அதிகாரியை விட நீசன் யாராவது இருக்கமுடியுமா? மற்றவர்களை தண்டிப்பதற்கு இந்த கொலைகாரர்கள், கொள்ளைக் காரர்கள், நீசர்களுக்கு எங்கிருந்து உரிமை கிடைத்தது? தண்டனையால் பாவத்தை போக்கத் தான் முடியுமா? தவறை தவறால் தடுக்க முடியாது. தாங்கள் நிரபராதிகள் என்று நிரூபிப்பதற்கு அந்த ஏழைகளுக்கு சந்தர்ப்பமும் கொடுக்கப்படவில்லை. உண்மையாகவே அவர்கள் குற்றவாளிகள்தானா? இல்லையா? என்பது யாருக்குத் தெரியும்?

இவ்வாறு சிந்தித்துக்கொண்டே ஊருக்கு வெளியே இருந்த நிர்மானுஷ்யமான பயங்கர காட்டுக் குள் சென்றேன். அந்தி மங்கும் வேளை. ஓரிடத்தில் கழுகுகள் கூட்டமாய் கூடியிருந்தன. நடுவில் கை, கால்கள், தலை வெட்டப்பட்ட ஒரு முண்டம் கிடந் தது. மரத்தில் ஒரு பிணம் ரத்தம் சொட்டத் தொங்கிக் கொண்டிருந்தது பக்கத்திலிருந்த ஒரு பள்ளத்தில் ஒரு பெண்ணின் சடலம் நிர்வாணமாய் கிடந்தது. ரத்தம் தோய்ந்த கற்கள் அதன்மீது குவிந்திருந்தன. அவர்கள்தான் அன்று பகல் தர்பா ரில் தண்டிக்கப்பட்ட ஏழைகள்! எவ்வளவு கோரக் காட்சி! நான் நினைவிழந்து விழுந்தேன்.

இரவு வெகு நேரம் கழித்து எனக்கு சுவாதீனம் வந்தது. இருண்ட இரவும், அடர்ந்த காடும் என்னை பயமுறுத்தின. ஒரு மரத்தடியை ஒட்டி உட்கார்ந்து கொண்டேன். சிறிது நேரம் பொருத்து யாரோ வருவதைப் பார்த்து மரத்துக்குப் பின்னால் ஒளிந்து கொண்டேன். நடக்கக்கூட சக்தியற்ற ஒரு கிழவி தட்டுத் தடுமாறிக்கொண்டு வந்தாள். கை, கால்கள் தலை வெட்டப்பட்டிருந்த முண்டத்தின்மீது விழுந்து கதறினாள். பக்கத்திலிருந்த ஒரு பள்ளத்தில் பிணத்தை தள்ளி மண்ணைப் போட்டு மூடினாள்.

"பனைவி, மக்களுக்காக தன்னையே பலியிட்ட நிரபராதியே! துன்பங்கள் வேதனைகளை சகித்துக் கொண்டிருக்க எங்களை மட்டும் ஏன் விட்டுச்சென்றீர் கள்! என் அருமை நாதா! என்னையும் உங்களிடம் அழைத்துக் கொள்ளுங்கள்! இந்த துக்கத்தை என்னால் தாங்கமுடியாது! குற்றமற்ற நாதா விடை கொடுங்கள்!" என்று புலம்பினாள்.

புலம்பிக்கொண்டே திரும்பிச் செல்ல ஆரம் பித்தாள். நான் வழி மறித்து நின்றேன். முதலில் பயந்தாள். பிறகு சமாளித்துக்கொண்டு "நீ யார்? மனமுடைந்த என்னை ஏன் வழி மறிக்கிறாய்?" என்று கேட்டாள்.

"தாயே! நீங்கள் சொன்னதை எல்லாம் கேட் டேன். உண்மையாகவே உங்கள் கணவர் நிரபராதி தானா?" என்று விசாரித்தேன்.

"என்னுடைய கணவர் வாலிபத்தில் உழைப்புக்கு அஞ்சியவரல்ல. உழைத்தே குடும்பத்தைக் காப்பாற் றினார். தள்ளாத காலத்தில் மகன் சம்பாதிக்க ஆரம் பித்தான், சென்ற வருஷம் ஐந்து குழந்தைகளை விட்டு அவனும் மரணமடைந்தான். ஒரு புறம் மக னுடைய துக்கம். இன்னொரு புறம் குடும்பக் கவலை ஏற்பட்டது வீட்டிலிருந்த தட்டு முட்டு சாமான் களையும் விற்று சாப்பிட்டாயிற்று பிறகு பிச்சை யெடுக்கச் சென்றார். பிச்சையும் கிடைக்கவில்லை. உழைத்துச் சாப்பிடவும் வலிமையிருக்கவில்லை. அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் சொன்ன யோசனையின் பேரில் அரசாங்கத்தின் இலவச உணவு விடுதியி லிருந்து உதவி செய்யும்படி முப்தியிடம் போய் முறையிட்டார். சம்பாதித்த காலத்தில் இலவச உணவு விடுதிக்கு உதவியவர்களுக்கு மட்டுமே உதவி செய்யப்படுமென்று முப்தி சொல்லிவிட்டான். "அப் படியானால் நான் என்ன செய்வேன்? என்று கெஞ் சியதற்கு "திருடு எங்காகிலும் போய் கொள்ளையடி என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?" என்று கடுகடுத்தான் முப்தி. மனமுடைந்துபோய் திரும்பி னார். உணவு விடுதியின் மூலையில் மாவு மூட்டைகள் கிடந்தன. பசியின் கொடுமையால் ஒரு மூட்டையை எடுக்க எண்ணினார். மனசாட்சி மறுத்தது. பசியால் துடிக்கும் குழந்தைகளின் நினைவு தூண்டியது. ஒரு மூட்டையை எடுத்தார். பல தினங்களாக பட்டினி கிடந்ததால் இரண்டு அடி நடப்பதற்குள் தள்ளாடி விழுந்து விட்டார். திருட்டுக்குற்றத்தை சாட்டி கொன்று விட்டார்கள்......." இதை சொல்லிவிட்டு கிழவிபோய் விட்டாள்.

சிறிது நேரம் கழித்து ஒரு அழகான யுவதி பயந்த பார்வையுடன் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு வந்தாள். மரத்தில் தொங்கிக்கொண்டி ருந்த வாலிபனின் பிணத்தை கட்டிக்கொண்டு அய்யோ! அண்ணா! வென்று அலறி மூர்ச்சையாய் விட்டாள். அவளை சுவாதீனத்துக்கு கொண்டுவர முயன்றேன். அவள் தன் அண்ணனுடைய கதையை சொன்னாள்.

"ஒரு நாள் சாயந்திரம் வீட்டு வாசலில் நின்றி ருந்தேன் அரசாங்க அதிகாரி ஒருவன் வந்து அண் ணனை விசாரித்தான். கொல்லையிருப்பதாகச் சொன் னேன். பேசத்தகாத வார்த்தைகளை என்னிடம் பேசினான். நான் வீட்டுக்குள்போய் விட்டேன். அண்ணனிடம் போய் வரிப்பணத்தைக் கேட்டான். அப்பொழுது வீட்டில் பணமில்லை. என்னை ஜாமீனாக

வைக்கும்படி கேட்டான். என்னைப்பிடித்து இழுத்து வர சிப்பாய்களை வீட்டுக்குள் அனுப்பினான். இந்தகேவலத்தைத் தாங்க முடியாமல் என்னுடைய மானத்தைக்காக்க என்தமயன் அவனைக் கொன்று விட்டான். தங்கையின் மானத்தைக் காத்த தமயன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டான்".

யுவதியின் பிணம் மட்டும் கேட்பாரற்றுக் கிடந்தது. யாராவது வருவார்களென்று சிறிது நேரம் காத்திருந்த பிறகு பிணத்தை எடுத்து நானே புதைத்து விட்டேன். அதற்குள் ஒரு வாலிபன் ஓடிவந்தான் யுவதி புதைக்கப்பட்டு விட்டதை அறிந்து பிரலாபித்தான். "சகோதரனே! ஒரு பாவமும் அறியாத அவளை கொன்று விட்டனர். அவள் மரியாளைப்போல் குற்றமற்றவள். சிறுவயதிலிருந்து நாம் பரஸ்பரம் நேசித்து வந்தோம். பருவமடைந்த பிறகு நம் கல்யாணம் நிச்சயமாயிற்று அதற்குள் அவளுடைய தந்தை இறந்து விட்டார். அவள் தன் சிற்றப்பனின் வீட்டில் இருந்து வந்தாள். தன்னுடைய சொத்து பற்றிய வியாஜ்ஜியத்தைக் குறித்து பேச ஒரு நாள் நீதிபதியிடம் சென்றாள் கிழவனாக இருப்பினும் அவன் ஒரு பாவி. அவளை மயக்க முயன்றான். அது பலிக்கவில்லை. சிற்றப்பனுக்கு ஆசைகாட்டி அவளை தனக்கு கல்யாணம் செய்து கொடுக்க சம்மதிக்கும் படிச் செய்தான். அவள் அவனை விரும்ப வில்லை. கலியாணத்திற்கு முதல் நாள் வீட்டை விட்டு ஓடியவள் வழியில் என்னை சந்தித்தாள். நான் அவளுக்கு புகலிடம் அளிக்க முன் வந்தேன். முதலில் அவள் சம்மதிக்க வில்லை வேறு வழியில்லாமல் போகவே என்னுடைய வீட்டுக்கு வர இசைந்தாள். அவளுடைய சித்தப்பனுக்கு செய்தி கிடைத்தது. சிப்பாய்களை அழைத்துக்கொண்டுவந்து வீட்டைசோதனைபோட்டு அவளை இழுத்துச் சென்றான்: நிரபராதியை விபசாரி என்று குற்றஞ் சாட்டி கற்களால் அடித்துக்கொன்று விட்டனர்." என்று சொல்லி காட்டுக்குள் ஓடி விட்டான.

என்ன அநியாயம்! உலகில் நியாயமுள்ளவர் எவருமில்லையா! பூவுலகில்தான் இல்லையென்றாலும் வானுலகில்கூடவா இல்லை! உரிமையை மறுத்து கிழவனை திருடும்படி நிர்ப்பந்தித்த குற்றவாளி ஈனமுப்திக்குபதிலாக கிழவன் தண்டிக்கப் படுவதா! ஒழுக்கமற்றவர்களை பதவியில் அமர்த்திய குற்றவாளி அரசனிருக்க தங்கையின் மானத்தைக்காத்த தமையனை தண்டிப்பதா! அதிகார மமதையில் பலவந்தமாக மணக்கவிரும்பிய சண்டாளனிருக்க அவனுடைய அடாச்செயலிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயன்ற ஒரு நிரபராதிப் பெண்ணா கொலப்படுவது! இது என்ன கொடுமை யுலகம்! இவ்வாறு எண்ணி என் உள்ளம் கொதித்தது.

சுற்றுமுற்றும் பார்த்தேன். நிரபராதிகளின் உறைந்த ரத்தத்தில் நக்ஷத்திர நிழல் துடித்தது. ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தேன். பகைவனின் உள்ளத்தில் தகிக்கும்பொறாமைப் பொறிபோல் ஆகாயத்தின் பரந்த மார்பில் யுத்த நக்ஷத்திரம் மின்னிற்று. பார்த்துக் கொண்டிருக்கும்போதே நக்ஷத்திரம் கீழே இறங்கிவந்தது. நான்கு திசைகளிலும் தீப் பொறிகள் சிதறின. சமீபத்தில் வந்ததும் கோர ரூபமுள்ள கழுகாக மாறிற்று. தீப்பொறிகள் கொழுந்துவிட்டு எறிய ஆரம்பித்தன. நிரபராதிகளின் சமாதிகள் மேல் படர்ந்திருந்த மரத்தில்உட்கார்ந்து கிழக்குஐரோப்பா வரை கிடுகிடுக்க இறகுகளை அடித்துக்கொண்டு மேகத்தைப்போல் கர்ஜித்து கழுகு சொல்லிற்று.

"மனிதர்கள் ஷைத்தான்களாக மாறிவிட்டனர். உல்லாசவாழ்க்கையில் திளைத்திருக்கும் அக்கிரமக்கார அதிகார வர்க்கத்தின் காதுகளுக்கு அவதிப்படும் மக்களின் பரிதாபக்குரல் கேட்பதில்லை அதிகாரிகள் நிரபராதிகளை கொடுமைப்படுத்துகின்றனர்- மதத்தலைவர்கள் உலக ஆசைக்கு இலக்காகி விட்டனர். உள்ளத்தால் பணத்தை பூஜித்து சடலத்தால் கடவுளை வணங்குகின்றனர். பொதுமக்கள் அறிவிழந்து பித்தலாட்டக்காரர்கள் கண்மூடித்தனமாக பின்பற்றி பாவப் படுகுழியில் விழுகின்றனர். பலசாலிகள் பலஹீனர்களின் கடைசி சொட்டு ரத்தத்தையும் உறுஞ்சுகின்றனர். ஐயோவென அலறுவதற்குக்கூட நசுக்கப்பட்டவர்களுக்கு சக்தியில்லை. சிம்மாதனங்கள் கவிழ்ந்து, முடிகள்உருண்டு, நீதிஸ்தலங்கள் ஒழிந்து, வணக்கஸ்தலங்கள் தரைமட்டமாகி, ஜனசஞ்சாரம் நிர்மூலமாக்கப்பட்டு, வயல்கள், தோட்டங்கள் நாசமாக்கப்பட்டு, ரத்தம் பெருக்கெடுத்துஓடி, வாலிபர்கள், கிழவர்கள், குழந்தைகள் அனைவரும் அதில் மூழ்கி மடிந்து உலகம் அழியும் காலம் வந்துவிட்டது!"

கழுகின் கர்ஜனை நின்றது. நிரபராதிகளின் உரைந்த ரத்தம் பொங்க ஆரம்பித்தது ஒரு வினாடிக்குள் எங்கும் ஒரே ரத்தமயம். அலைவீசும் உதிரக்கடலில் மனிதர்கள், இதர ஜீவராசிகள், மரங்கள் குப்பையைப்போல் மிதந்தன. நானும் மிதந்துகொண்டிருந்தேன். பயந்து அலறிக்கொண்டு கண்களைத் திறந்தேன். முன்னாலிருந்த சுவற்றில் "28, ஜூலை 1914" என்று பொறிக்கப்பட்டிருந்த காலண்டர் தொங்கிக் கொண்டிருந்தது. தெருவில் பத்திரிகை விற்கும் பையன் "**யுத்தம்! யுத்தம்!!**" என்று கத்தினான்.

---

நமது ஏஜண்டுகள்:—


ஸிலோன் முழுவதற்கும்
'ஆஸாத்' ஏஜெண்ட்

மெஸ்ஸர்ஸ்
**எம்மல் & கோ.,**
ஜெனரல் மர்ச்செண்ட்ஸ் & கமிஷன் ஏஜெண்ட்ஸ்
**கம்போலா,**
ஸிலோன்.

**WHOLE CEYLON AGENCY**
FOR
**"AZAD"**
EMMEL & Co.,
General Merchants & Commission Agents,
**GAMPOLA, (CEYLON)**

P. S முகம்மது மைதீன் சாகிப்,
ஷம்ஸுல்ஹுதா முஸ்லிம் சங்கம்,
அல்லிமுப்பன் தெரு, கடையநல்லூர்

*M. S. M.* கனி,
மரம், ஓடு வியாபாரம்,
கோபிசெட்டிப்பாளையம்.

ரா கணபதி,
C/o M. S. முனிசாமி,
ஈஸ்வரய்யர் சந்து,
மெயின் ரோடு, திண்டுக்கல்.

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது
"ஆஸாத்" விற்பனை செய்ய
**ஏஜெண்டுகள் தேவை.**

E. V. K. மீரான் சாஹிப்,
சத்திர தெரு, கல்லிடைக்குறிச்சி

முகம்மது சாலீஹ் சாஹிப்,
சாலீஹ் & ஸன்ஸ்,
எடத் தெரு, நாகப்பட்டிணம்.

P. K. E. அப்துல்லா,
லத்தீப் பில்டிங்ஸ்,
ஆஸாத் தெரு, வலங்கைமான்.

பீ. மீரா மொய்தீன் சாகிப்,
ரெங்கோன் ஹால், காரைக்குடி.

S. S. முகம்மது இப்ருஹிம் மரைக்காயர்,
" ஆஸாத் ஸ்டோர் "
கடைத்தெரு, அதிராம்பட்டணம்.

*G.* அப்துல் லத்தீப்,
மணியக்காரத்தெரு, திருச்சி.


**'ஆஸாத்'**

பணத்தை வைத்துக்கொண்டு கொடுக்காமலிருக்கும் ஏஜண்டுகளின் பெயர்கள் பணம் கொடுக்கும் வரை வாரந்தோறும் இங்கு வெளியிடப்படும்.

ஏஜண்டு பெயர்:
**அப்துல் சலாம்,** ஈரோடு.


Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.